திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், இந்திரா நகர் பகுதியில் ஆவின் சார்பாக பாலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் பாலகம் அமைப்பதற்கு கோரிக்கை மனு பெறப்பட்டவுடன், அந்த இடம் எந்தத் துறையைச் சார்ந்தது என்று பரிசீலனை செய்து, ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 309, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

309—

விதைப் பண்ணை

***630—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசு விதைப் பண்ணையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பதெல்லாம் கிடைத்துவிட்டால் வாழ்க்கையில் ரசனை இருக்காது; கிடைத்தவையெல்லாம் நிலைத்துவிட்டால் கேட்பதற்கு எதுவும் இருக்காது என்று கூறி இவ்வினாவிற்கு விடையளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள பொங்கலூர் அரசு விதைப் பண்ணையின் மொத்தப் பரப்பளவான 39.05 ஏக்கரில், கட்டடங்கள், மரங்கள், நீர்ப்பாசன அமைப்புகள் நீங்கலாக 32.9 ஏக்கர் பரப்பளவானது பயிரிடப்படுவதற்கான பரப்பளவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கு 3 ஆழ்குழாய்க் கிணறுகளும், ஒரு விதை சுத்திகரிப்பு நிலையமும், 2 உலர் களங்களும், ஒரு விதை சேமிப்புக் கிடங்கும், இயந்திரக் கலப்பை, மின் மோட்டார், ஆயில் என்ஜின் கலப்பை போன்ற பண்ணைக்குத் தேவையான இயந்திரங்களும் உள்ளன. கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.27.9 இலட்சம் நிதியானது, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டு, விதைப் பண்ணை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதன் பயனாக 2013–2014 ஆம் ஆண்டில் இப்பண்ணையினுடைய சாகுபடித் திறன் 135 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. நடப்பு 2014–2015 நிதியாண்டிலும் இப்பண்ணையின் விரிவாக்கத்திற்கென ரூ.46 இலட்சத்தில் பண்ணைப் பணிகளை மேற்கொள்ள அரசு விதைப் பண்ணைகளை மேம்படுத்துதல் என்ற புதிய திட்டத்தின்கீழ் நிதி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சாகுபடித் திறனையும் 135 சதவிகிதத்திலிருந்து 195 சதவிகிதமாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில், அனைத்திலும் முதலிடம்; எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்;

இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற நோக்கத்தில் அல்லும் பகலும் அயராது உழைத்து ஏழரைக் கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தினைப் பெற்று, நாடும், ஏடும், நல்லோர் உலகமும் போற்றிடும் ஏற்றமிகு ஆட்சியைத் தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வி கேட்டு சபைக்கு வரும் முன்பே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்தப் பண்ணைக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து, அது சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பதற்கு மீண்டும் ஒரு முறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுக் காலமாக அந்த விதைப் பண்ணை பராமரிப்பு செய்யப்படாமல் பாழடைந்து கிடந்தது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இந்த விதைப் பண்ணைக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மூன்று முறை நேரடியாக வருகை தந்து ஆய்வு செய்த பிறகு, மிகச் சிறப்பாக இந்தப் பண்ணை இப்போது செயல்பட்டு வருகிறது. மேலும் 2012–2013 ஆம் ஆண்டுக்கு ரூ.27.80 இலட்சமும், 2013–2014 ஆம் ஆண்டில் ரூ.7.35 இலட்சமும், கட்டடம் மற்றும் இயந்திரங்களுக்கு ரூ.41.5 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட பணிகளை நிறைவு செய்து கொடுத்த தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த விதைப் பண்ணை திருப்பூர் மாவட்டத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த விதைப் பண்ணையில் வேளாண் பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

இந்த விதைப் பண்ணைக்கு இரு முனை மின்சாரம்தான் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விதைப் பண்ணை துணை மின் நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. மேலும் PAP பாசன வசதி பெற்றுள்ளது. இந்த விதைப் பண்ணைக்குத் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்கினால், இன்னும் மிகச் சிறப்பாக பணிகளை மேம்படுத்த இயலும் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இந்த வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் விடிவெள்ளியாக, காலம் கனிவுடன் தந்த கருணை மழையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்றார்கள். அவரது சிந்தனையில் உதிக்கும் புதுப் புதுத் திட்டங்களைப் புகுத்தி, புத்தாக்கம் செய்யப்பட்ட பண்ணையாக இப்பண்ணை செயல்பட, பல்லடம் சட்டமன்றத் தொகுதி, பொங்கலூர் அரசு விதைப் பண்ணை மாற்றத்துடன் ஏற்றம் கண்திட, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைகள், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, துறைமூலம் உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று ஆவன செய்யப்படும் என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*